## <u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

## <u>M.C.O.P.No.69/2017</u>

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கல்யாணி |
| தகப்பனார் / கணவர் | .. | துருவன் |
| வயது | .. | 55 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | பிரம்மதேசம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை:</u>

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, விபத்து பதிவேடு அசல் ம.சா.ஆ.2, 08.02.2017 முதல் 21.02.2017 உள்நோயளியாக சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.சா.ஆ.3, 22.02.2018 முதல் 15.03.2018 சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.சா.ஆ.4, மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.5, மருத்துவ செலவு பில்கள் ம.சா.ஆ.6, விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.7, விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பாலிசி நகல் ம.சா.ஆ.8 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**